1967 ஜூலை 11]

தைப் பெற்றிருக்கிறார்கள் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், நானே அந்தப் பாலை குடித்திருக்கிறேன், இரண்டு மூன்று நாட்களாக. பாலைப் பற்றிய அனுபவம் எனக்கு உண்டு. குடிக்க முடியாத அளவிற்கு நாற்றம் வந்தது.

(பதில் இல்லை.)

மண் எண்ணெய்

*247 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) 1960 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் மண் எண்ணெய் எங்கெங்கே எடுக்கப்படுகிறது?

(இ) எந்தத் துறையில்?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN :

(*a*) No mineral oil has so far been exploited in this State.

(*b*) Does not arise.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதற்கான ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்ததே. இனிமேலாவது எந்த அளவுக்கு கிடைக்கும் என்று பார்க்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் எண்ணெய் கிடைக்கும் என்று சொல்லப்பட்டதன் காரணமாக 1958-59-லிருந்து ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது. இதுவரையில் காரைக்கால், கொள்ளிடப் பகுதி, பாம்பன் முதலிய இடங்களில் துளைகள் போடப்பட்டிருக்கின்றன. ரஷ்ய வல்லுநர்களுடைய உதவியுடன் பட்டுக்கோட்டைப் பகுதியில் இரண்டு துளைகள், 259 மீட்டருக்கு ஒன்றும், 988 மீட்டருக்கு ஒன்றும் போடப்பட்டன. அதே போன்று கந்தர்வகோட்டை முதலிய இடங்களிலும் துளைகள் போட திட்டம் உண்டு. ஆனால் எண்ணெய் இருக்கக் கூடும் என்பதற்கு அறிகுறிகள் இருந்தாலும், வாணிகம் செய்யும் அளவிற்கு குறிப்புகள் இன்னும் கிடைக்கவில்லை. ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது.

விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்

*248 வின—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்த விளையாட்டு வீரர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இனிமேலாவது அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு சாதாரண மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள் இருக்கின்றன. அதன் மூலமாக ஏற்பாடு செய்யலாம். மற்றவர்களுக்கும் பயிற்சி கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் அவர்களைப் பயன் படுத்தும் நிலை பற்றி சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் : சபாநாயகர் அவர்களே, இனிமேலாவது அரசாங்கம் மெட்ராஸ் ஸ்டேட், இந்தியா இவற்றை ரெப்ரசென்ட் செய்த பெரிய விளையாட்டுக்காரர்களுக்கு பென்ஷன் கொடுக்க யோசனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபோன்ற உத்தேசம் இதுவரையில் இல்லை. அவர்களைக் கொண்டு பயிற்சி கொடுக்கச் செய்து அந்த வகையில் ஊதியம் தேடி அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழி இருக்கிறது. பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஆலோசிக்கப்படவில்லை. இனிமேல்தான் அவசியமானால் ஆலோசிக்கப்படவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இது விளையாட்டுக்காரர்களுக்கு பென்ஷன் அளிக்கும் கேள்வியாக இருந்தாலும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வெளி நாடுகளுக்கு அனுப்ப சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும். இந்தக் கேள்வி பென்ஷன் பற்றியது.

நூல் விலைகள்

* 249 வினா—**திரு. எஸ். ஜே ராமசாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 36, 40, 60, 80 ஆகிய நம்பர் நூல் விலையில் ரூ. 7-லிருந்து 10 ரூபாய் வரை ஏறிவிட்டதை தடுக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

(ஆ) மேற்படி நூல் விலை ஏற்றத்தால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு வேலையில்லாமல் இருப்பதை நீக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை?